# 4

# விலைகளும் கூலிகளும்

## 4.1 பொதுநோக்கு

*உத்தியோகபூர்வ நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் நியதிகளில் அளவிடப்பட்ட பொது விலை மட்டமானது 2020 காலப்பகுதியில் குறைந்த வேகத்தில் அதிகரித்திருந்தது. இது கொவிட்-19 உலகளாவிய தொற்றுநோய்ப் பரவலைத் தடுப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு வழிமுறைகளுடன் இணைந்து அத்தியாவசியமற்ற பொருட்கள் மற்றும் பணிகளுக்கான குறைவடைந்த கேள்விகளால் துணையளிக்கப்பட்டிருந்தது. அத்தியாவசியமற்ற பொருட்கள் மற்றும் பணிகளின் பெரும்பாலானவற்றை உள்ளடக்கியிருந்த உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகள் ஆண்டின் ஆரம்பத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினை காட்டியிருந்த போதிலும் 2020 காலப்பகுதியில் சிறிதளவால் அதிகரித்திருந்தது. மேலும், வானூர்தி கட்டணங்கள், சுகாதாரம் மற்றும் கல்வி என்பவற்றின் மீதான அவ்வவ்போதான விலைத் திருத்தங்கள் காணப்படாமையானது 2020 காலப்பகுதியில் பொது விலை மட்டத்தின் நடத்தையின் மீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அதேவேளை, விலைகளை நிலையான மட்டங்களில் பேணுவதற்காக அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட நிருவாக விலைக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் காணப்பட்டபோதிலும் உணவு வகைகளிலுள்ள பொருட்களின் விலைகள் 2020 காலப்பகுதி முழுவதும் கணிசமாக அதிகரித்திருந்தன. உணவு வகைகளுக்குள், 2019இன் இறுதிப்பகுதியில் காணப்பட்ட தொடர்ச்சியான மழையின் காரணமாக தானியங்களின் சேதத்தின் விளைவால் ஏற்பட்ட நிரம்பல் பற்றாக்குறையினால் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் அடிக்கடி தளம்பலடையும் உணவுப் பண்டங்களின் விலைகள் அதிகரித்திருந்ததுடன் ஒட்டுமொத்தமாக அதிகரிக்கும் போக்கினை காட்டியிருந்த ஏனைய உணவுப் பண்டங்களின் விலைகளுடன் இணைந்து 2020 காலப்பகுதியில் கலந்த அசைவினை காட்டியிருந்தது. எனினும், உத்தியோகபூர்வ விலைச்சுட்டெண்களில் அதிகளவான பங்கிற்கு வகைகூறுகின்ற உணவல்லா வகைகளின் விலைகளில் அவதானிக்கப்பட்ட சிறிதளவான அதிகரிப்பினால் பொது விலை மட்டத்தின் மீதான உயர்ந்த உணவு விலைகளிலிருந்து தோற்றம்பெற்ற அழுத்தங்கள் பகுதியளவில் மிதமாக்கப்பட்டன. அதேவேளை, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பாதகமான தாக்கத்திற்கு மத்தியில் பெயரளவிலான கூலிகள் பொருளாதாரம் முழுவதும் அதிகரித்திருந்தபோதிலும், சம்பளச் சபையினால் ஆளப்படுகின்ற கூலிகளைக் கொண்ட முறைசார்ந்த தனியார் துறை ஊழியர்கள் மற்றும் முறைசாரா தனியார் துறை ஊழியர்கள் ஆகியோரின் உண்மைக் கூலிகள் 2020இல் வீழ்ச்சியடைந்திருந்தன. 2012 காலப்பகுதியின் பின்னர் முறைசாரா தனியார் துறையிலுள்ள ஊழியர்கள் உண்மைக் கூலிகளில் வீழ்ச்சியை அனுபவித்திருந்தமை இதுவே முதற் தடவையாகும். எனினும், புதிய ஓய்வூதியத்திற்குட்படாத மாதாந்த இடைக்கால கொடுப்பனவாக ரூ.2,500இனை அறிமுகப்படுத்தியமை மற்றும் அடிப்படைச் சம்பளத்திற்கான விசேட கொடுப்பனவினதும் இடைக்காலக் கொடுப்பனவினதும் இறுதித் தொகுதியினை சேர்த்ததன் ஊடாக அரச துறை ஊழியர்களின் உண்மைக் கூலிகள் 2020இல் அதிகரித்திருந்தன.*

## 4.2 விலைகள்

### பொது விலை மட்டத்தின் அசைவுகள்

**உள்நாட்டுச் சந்தையில் உணவல்லா விடயங்களுக்கு காணப்பட்ட குறைந்தளவான கேள்வியின் பின்னனியில் விசேட நிலைமைகளை எடுத்துக்காட்டி, தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்[1] ஆகிய இரு நுகர்வோர் விலைச் சுட்டெண்களினாலும் அளவிடப்பட்ட பொது விலை மட்டமானது 2020 காலப்பகுதியில் உணவு வகைகளிலுள்ள பொருட்களின் விலைப் போக்கினையே பெரிதும் பின்தொடர்ந்திருந்தது.** அதற்கமைய, 2020 சனவரியில் அதிகரித்திருந்த பொது விலை மட்டமானது 2020 ஏப்பிறல் வரை வீழ்ச்சிப் போக்கொன்றில் சென்று அதன்பின்னர் அதிகரித்திருந்தது. 2020 காலப்பகுதியில் உணவு வகைகளிலுள்ள பொருட்களின் விலைகளின் போக்கு கலந்த அசைவுகளை எடுத்துக்காட்டிய அதேவேளை, உணவல்லா வகைகளிலுள்ள பொருட்கள் மிதமான மாற்றங்களைக் காண்பித்திருந்ததுடன் இது முடக்கல் காலப்பகுதியில் அத்தியாவசியமற்ற பொருட்கள் மற்றும் பணிகளுக்கான குறைந்தளவான கேள்வியை எடுத்துக்காட்டியிருந்தது. ஆகையால், உணவல்லா வகைகளிலுள்ள பொருட்களின் விலைகள், சனவரி தொடக்கம் மார்ச் வரையான காலப்பகுதியில் அதிகரித்த உத்வேகத்தினைக் காண்பித்திருந்த போதிலும், அவை 2020 ஏப்பிறல் மற்றும் யூன் மாதங்களுக்கிடையில் பரந்தளவில் உறுதியான போக்கினையே காண்பித்திருந்தன. எனினும், 2020 ஓகத்தில் சுகாதார துணை வகைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிக்கு மத்தியில் பிரதானமாக போக்குவரத்து (பேருந்து கட்டணம்), ஆடை, மற்றும் காலணி போன்ற துணை வகைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களுடன் யூலை மாதத்திலிருந்து இவை மீண்டும் அதிகரித்திருந்தன.

**அரிசி, தேங்காய், காய்கறிகள், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு போன்றவற்றின் விலைகள் 2020 ஆண்டு முழுவதும் தளம்பலடையும் உணவு[2] வகைகளின் போக்கின் மீது கணிசமான தாக்கத்தைச் செலுத்தியிருந்தன.** அதற்கமைய, 2019இன் பிந்தியப் பகுதியில் நிலவிய நீண்ட மழைக்கால நிலைமைகளினால் தூண்டப்பட்ட பயிற் சேதங்களின் காரணமாக ஆண்டின் தொடக்கத்தில் அதிகரித்த தளம்பலடையும் உணவு வகைகளிலுள்ள பொருட்களின் விலைகள், 2020 மே மாதம் வரை வீழ்ச்சிப் போக்கொன்றில் நகர்ந்திருந்ததுடன் அதன் பின்னர் ஒட்டுமொத்தமாக அதிகரிக்கும் போக்கினைப் பின்தொடர்ந்திருந்தது. காய்கறிகள், தேங்காய் மற்றும் சின்ன வெங்காயம் போன்றவற்றின் விலை அதிகரிப்புக்கள், 2020 சனவரியில் தளம்பலடையும் உணவு வகையில் அவதானிக்கப்பட்ட சிறிதளவான உயர்விற்கு பிரதானமாக பங்களித்திருந்தன. 2019 ஏப்பிறலில் இருந்து அதிகரித்த தளம்பலடையும் உணவு விலைகள் 2020 பெப்புருவரியில் இருந்து மே மாதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தன. இதில் அரிசி, காய்கறிகள், வெங்காயம், பெரிய மீன்கள் மற்றும் பச்சை மிளகாய் என்பவற்றின் விலை வீழ்ச்சிகள் 2020 பெப்புருவரிக்கும் ஏப்பிறலுக்கும் இடையிலான தளம்பலடைந்த உணவு வகைகளின் போக்கின் மீது கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தன. அதேவேளை, 2020 மே மாதத்தில் தேங்காய், உடன் பழங்கள், உருளைக்கிழங்கு மற்றும் சின்ன வெங்காயம் என்பவற்றின் விலைகள் குறைவடைந்த அதேவேளை, அரிசி, காய்கறிகள், உடன் மீன் மற்றும் இறைச்சி போன்றவற்றின் விலைகளில் அதிகரிப்புகள் அவதானிக்கப்பட்டன. 2020 யூனில் தளம்பலடையும் உணவுப் பொருட்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கு அரிசி, காய்கறிகள், உடன் மீன் மற்றும் கோழி இறைச்சி போன்றவற்றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் அநேகமாக காரணமாக அமைந்திருந்தன. எவ்வாறாயினும், இவ்வதிகரித்த போக்கானது அரிசி, தேங்காய், காய்கறிகள் மற்றும் வெங்காயம் என்பவற்றின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக 2020 யூலையில் திரும்பலடைந்திருந்தது. இருந்தபோதிலும், அரிசி, காய்கறிகள், தேங்காய், பெரிய வெங்காயம், மற்றும்

அட்டவணை 4.1
தெரிவுசெய்யப்பட்ட உணவு விடயங்களின் உயர்ந்தபட்ச சில்லறை விலைகள்


| விடயம் | தற்போதைய உயர்ந்தபட்ச சில்லறை விலை (ரூ.) | உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் நடைமுறைக்கு வரும் திகதி |
|---|---|---|
| அரிசி | | 28.05.2020 |
| சம்பா | 98.00 | |
| நாட்டரிசி | 96.00 | |
| குத்தரிசி - சிவப்பு | 93.00 | |
| குத்தரிசி - வெள்ளை | 93.00 | |
| தேங்காய் | | 25.09.2020 |
| 12 அங்குலத்திற்கு கீழான சுற்றளவு | 60.00 | |
| 12-13 அங்குலத்திற்கிடையிலான சுற்றளவு | 65.00 | |
| 13 அங்குலத்திற்கு மேலான சுற்றளவு | 70.00 | |
| வெள்ளைச் சீனி | 85.00 | 10.11.2020 |
| பெரிய வெங்காயம் | 150.00 | 18.03.2020 |

*மூலம்* : நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை

1 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது உத்தியோகபூர்வ நுகர்வோர் விலைச் சுட்டெண்களாகிய தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு 2013=100) மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொ.நு.வி.சு 2013=100) ஆகிய இரண்டு நுகர்வோர் விலைச் சுட்டெண்களையும் மாதாந்த அடிப்படையில் தொகுக்கின்றது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது தேசிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட நுகர்வோர் பொருட்களின் விலை அசைவுகளைக் குறித்துக்காட்டுகின்ற அதேவேளை, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது கொழும்பு மாவட்டத்திலுள்ள நகர்ப்புற வீட்டுத்துறையினர் மத்தியில் தெரிவுசெய்யப்பட்ட நுகர்வோர் பொருட்களின் விலை அசைவுகளை எடுத்துக்காட்டுகின்றது.

2 தளம்பலடையும் உணவானது அரிசி, இறைச்சி, உடன் மீன், கடலுணவு, தேங்காய், உடன் பழங்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட கறிச்சரக்கு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

வரைபடம் 4.1
விலைகள் மற்றும் கூலிகளின் அசைவுகள் - 2020




(அ) தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் விலைகளின் வருடாந்த சராசரி சதவீத மாற்றம்
(ஆ) தளம்பலடையும் உணவானது அரிசி, இறைச்சி, உடன் மீன் மற்றும் கடலுணவு, தெங்கு, உடன் பழங்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட சுவையூட்டும் பொருட்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.
(இ) ஏனைய உணவானது தளம்பலடையும் உணவுப் பண்டங்கள் நீக்கப்பட்ட ஏனைய உணவுப் பண்டங்களை உள்ளடக்குகின்றது.
(ஈ) பெயரளவு கூலிகளின் வருடாந்த சராசரி சதவீத மாற்றம்.
(உ) உண்மை கூலிகளின் வருடாந்த சராசரி சதவீத மாற்றம்.

உருளைக்கிழங்கு போன்றவற்றில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புகளின் காரணமாக 2020இன் பின்னரான காலப்பகுதியில் தளம்பலடையும் உணவு வகைகளிலுள்ள பொருட்களின் விலைகள் அதிகரித்த அதேவேளை பழங்களின் விலைகளும் 2020 ஓகத்து மற்றும் செத்தெம்பர் மாதங்களில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்கள் மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. மீன் விலைகள் பெரும்பாலும் அண்மைக் காலங்களில் காணப்பட்ட விலைப் போக்கினைக் கொண்டிருந்த போதிலும் 2020 ஒத்தோபர் இறுதியில் பேலியகொட மீன் சந்தை தொகுதியில் இனங்காணப்பட்ட கொவிட்-19 கொத்தணியின் காரணமாக கணிசமான விலை வீழ்ச்சி அவதானிக்கப்பட்டிருந்தது. எனினும், உலகளாவிய நோய்த்தொற்று நிலைமையானது ஓரளவிற்கு கட்டுப்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டதன் காரணமாக வர்த்தக நடவடிக்கைகள் இயல்புநிலையை அடைந்திருந்ததுடன் 2020 திசெம்பரில் மீன்களின் விலைகள் ஓரளவிற்கு மீட்சியடைந்தன. மேலும், தேசிக்காய் மற்றும் பச்சை மிளகாய் போன்றவற்றின் விலைகளும் ஆண்டு காலப்பகுதியில் தளம்பலடையும் உணவுப் பொருட்களின் விலை மட்டங்கள் மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன.


**தளம்பலடையும் உணவுப் பொருட்களின் விலைகளை நிலையான மட்டத்தில் பேணுவதற்கு அரசாங்கம் விலைக் கட்டுப்பாடுகளின் ஊடாக கணிசமான முயற்சியை 2020இல் மேற்கொண்டிருந்தது.** அதிகரித்து செல்லும் அரிசி விலைகளைக் குறைக்கும் நோக்குடன், 2020 ஏப்பிறல் 10ஆம் திகதியன்று கிலோ கிராம் ஒன்றிற்காக சம்பா மற்றும் நாட்டரிசிக்கு விதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச சில்லறை விலைகளான ரூ.90 மற்றும் பச்சை அரிசிற்கான ரூ.85 என்பன 2020 மே மாதம் 28இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கிலோ கிராம் ஒன்றின் சம்பா, நாட்டரிசி மற்றும் பச்சையரிசி என்பவற்றின் உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் ரூ.98, ரூ.96 மற்றும் ரூ.93இற்கு மேல்நோக்கி திருத்தப்பட்டன. அதன்பின்னர், அரிசியின் சில்லறை விலைகளை நிலையான மட்டமொன்றில் வைத்திருப்பதற்கான மேலதிக முயற்சியொன்றாக 2020 நவம்பர் 04ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் சம்பா, நாட்டரிசி மற்றும் பச்சையரிசி போன்றவற்றின் உயர்ந்தபட்ச மொத்த விலையானது கிலோ கிராம் ஒன்றிற்கு ரூ.94, ரூ.92 மற்றும் ரூ.89இற்கு விதிக்கப்பட்டன. எவ்வாறாயினும், 2020இன் பிந்தியப் பகுதியில் சிறுபோக அறுவடை சந்தைக்குக் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் சம்பா அரிசியின் நிரம்பலில் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டிருந்தது. நிலையான மட்டங்களில் விலைகளைப் பேணுவதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எவ்வாறாயிருப்பினும், அரிசி விலைகள் செத்தெம்பர் தொடக்கம் தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் உயர்ந்தபட்ச சில்லறை விலைகளுக்கு மேலாக காணப்பட்டன. 2020இல் தேங்காய் விலைகள் தளம்பலடையும் உணவு வகைகளின் விலைகளின் மீது குறிப்பிடத்தக்க தாக்கமொன்றை ஏற்படுத்தியிருந்தன. 2020 காலப்பகுதியில் மே மற்றும் யூலை மாதங்களைத் தவிர ஏனைய மாதங்களில் தேங்காயின் விலைகள் அதிகரித்திருந்த அதேவேளை 2019இன் அதேகாலப்பகுதியில் நிலவிய விலைகளுக்கு மேலாக காணப்பட்டது. இதன் விளைவாக, அதன் சுற்றளவைக் கருத்திற்கொண்டு 2020 செத்தெம்பர் 25 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் தேங்காய்களின் சுற்றளவானது 12 அங்குலத்திற்கு கீழ், 12-13 அங்குலத்திற்கு இடைப்பட்ட மற்றும் 13 அங்குலத்திற்கு மேல் என்ற அடிப்படையில் முறையே ரூ.60, ரூ.65 மற்றும் ரூ.70 என்ற வகையில் உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலைகள் விதிக்கப்பட்டன. எவ்வாறாயினும், தேங்காய் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்திருந்ததுடன் அவை உயர்ந்தபட்ச சில்லறை விலைக்கு மேலாக காணப்பட்டதுடன் உள்நாட்டு சந்தையில் காணப்பட்ட கேள்வி மற்றும் நிரம்பல் என்பவற்றிற்கிடையிலான இடைவெளியை முகாமை செய்வதற்காக பொருத்தமான வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கான தேவைப்பாட்டையும் அடையாளப்படுத்தியிருந்தது. 2020இன் பெப்புருவரியில் இருந்து ஏப்பிறல் வரையான காலப்பகுதியில் பெரிய வெங்காயத்தின் விலைகள் 2014 தொடக்கம் நேரொத்த மாதங்களில் நிலவிய விலைகளுக்கு நன்கு மேல் மட்டத்தில் காணப்பட்டன. இதன் மூலம் 2020 பெப்புருவரி 23 மற்றும் 2020 மார்ச் 18 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் கிலோ கிராம் ஒன்றிற்கு முறையே ரூ.190 மற்றும் ரூ.150 கொண்ட உயர்ந்தபட்ச சில்லறை விலைகளை விதிப்பதற்கு அரசாங்கம் நிர்பந்திக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பன்னாட்டுச் சந்தையின் குறைவான விலைகளைப் பிரதிபலித்து பெரிய வெங்காயத்தின் விலைகள், 2020 ஏப்பிறலில் இருந்து யூலை வரையான காலப்பகுதியில் வீழ்ச்சிப்போக்கினைப் பின்தொடர்ந்திருந்தன. அதன் பின்னர், பிரதானமாக பயிர்ச் சேதங்களின் விளைவாக உள்நாட்டு உற்பத்தியில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சி மற்றும் 2020 செத்தெம்பர் 15இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் இந்தியாவினால் விதிக்கப்பட்ட ஏற்றுமதித் தடை என்பனவற்றின் காரணமாக பெரிய வெங்காயத்தின் விலைகள் அதிகரித்திருந்தன. அதேவேளை, 2020 மே 01 மற்றும் 2020 ஓகத்து 01 இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கிலோ கிராம் ஒன்றிற்கு முறையே ரூ.15இற்கும் ரூ.50இற்கும் அதிகரிக்கபட்டது. எனினும், அரசாங்கமானது உலகளாவிய நோய்த்தொற்று மீளத் தோற்றம்பெற்றதுடன் தோன்றிய இடர்பாடுகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் 2020 ஒத்தோபர் 14ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் இறக்குமதிசெய்யப்பட்ட பெரிய வெங்காயம் மீதான சிறப்புப் பண்டத் தீர்வையை கிலோ கிராம் ஒன்றிற்கு 25 சதங்களுக்கு கீழ்நோக்கி திருத்தம் செய்திருந்தது. மேலும், எகிப்து, துருக்கி, பாகிஸ்தான், மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகளிலிருந்து வேறுபட்ட தரங்களுடன் கூடிய வர்க்கங்கள் கிடைக்கப்பெற்றமையும் 2020இன் நவம்பருக்கும் திசெம்பருக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பெரிய வெங்காயத்தின் விலை நிலைபெறுவதற்கு பங்களித்திருந்தது. மேலும், ஆண்டின் தொடக்கத்தில் அதன் உச்சத்தினைப் பதிவுசெய்திருந்த சின்ன வெங்காயத்தின் விலைகள் 2020 மே மாதம் 22 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் கிலோ கிராம் ஒன்றிற்கு ரூ.50ஆக சிறப்புப் பண்டத் தீர்வை அதிகரிக்கப்பட்ட போதிலும், 2020 யூலை மற்றும் செத்தெம்பருக்கு இடையேயான காலப்பகுதியில் ஓப்பீட்டளவில் குறைவடைந்திருந்தன. எனினும், ஒத்தோபர் தொடக்கம் சின்ன வெங்காயத்தின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்தன. முன்னைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட விலைகளுக்கு மேல் காணப்பட்ட உருளைக்கிழங்குகளின் விலை, அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட ஒரேவிதமான அசைவுகளையே பெரும்பாலும் பின்தொடர்ந்திருந்தது. அதேவேளை, 2020 மே மாதம் 22 மற்றும் 2020 ஓகத்து 15 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் இறக்குமதிசெய்யப்பட்ட உருளைக்கிழங்கு கிலோ கிராம் ஒன்றிற்கான சிறப்புப் பண்டத் தீர்வையானது முறையே ரூ.50இற்கும் ரூ.55இற்கும் அதிகரிக்கப்பட்டது. அதற்கமைய, இரு நுகர்வோர் விலைச் சுட்டெண்களினதும் தளம்பலடையும் உணவுச் சுட்டெண்கள், 2019உடன்

ஒப்பிடுகையில் அதிகரிப்பானது குறைந்த மட்டத்தில் காணப்பட்டபோதிலும் 2020 காலப்பகுதியில் அதிகரித்த போக்கினையே பின்தொடர்ந்திருந்தது.

**உணவு விலைகளை நிலையான மட்டமொன்றில் பேணுவதற்கான அரசாங்கத்தின் தலையீட்டிற்கு மத்தியில் அடிக்கடி தளம்பலடையும் உணவு நீங்கலான உணவுப் பொருட்களின் விலைகள் 2020இல் ஒட்டுமொத்தமாக அதிகரிக்கின்ற போக்கில் காணப்பட்டதுடன் பொது விலை மட்டத்தின் மீது அழுத்தத்தினை ஏற்படுத்தியிருந்தது.** பருப்பு, சீனி, தேங்காய் எண்ணெய், முட்டை, அரிசி மா, பால் மா, தானியம், கருவாடு, தகரத்திலடைத்த மீன், மற்றும் மஞ்சள் தூள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட அவ்வப்போதான விலை மாற்றங்கள் இவ்வகையின் விலைப்போக்கின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. 2020இன் இறுதியில் கணிசமாக அதிகரித்த பருப்பின் விலைகள் 2020 மார்ச் மற்றும் ஏப்பிறல் மாதங்களைத் தவிர ஏனைய மாதங்களில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர்வாகக் காணப்பட்டன. கொவிட்-19 தொற்றுநோயைத் தொடர்ந்து நாட்டில் நிலவிய நிலைமையின் போது நுகர்வோருக்கு நிவாரண ஏற்பாடுகளாக 2020 மார்ச் 18இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் கிலோ கிராம் ஒன்றிற்கு பருப்பிற்கு விதிக்கப்பட்ட ரூ. 65 மற்றும் 425 கிராம் நிறையுடைய தகரத்திலடைத்த மீனிற்கான ரூ.100 கொண்ட உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் 2020 ஏப்பிறல் 30இலிருந்து நீக்கப்பட்டன. அதேவேளை, விலைக் கட்டுப்பாடுகளின் பகுதியளவிலான தாக்கத்தினைப் பிரதிபலித்து தகரத்திலடைத்த மீன்களின் விலைகள் 2020 மார்ச் மற்றும் ஏப்பிறல் மாதங்களில் குறைவடைந்தன. இறக்குமதி செய்யப்பட்ட பால் மா விலைகள் 2020ஆம் ஆண்டு முழுவதும் மாற்றமின்றி காணப்பட்ட அதேவேளையில், உள்நாட்டுப் பால் மா விலையானது இறக்குமதிசெய்யப்பட்ட பால் மா விலையுடன் ஒத்திருப்பதற்கு 2020 ஏப்பிறல் 28இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் 400 கிராம் பொதியொன்று ரூ.345இலிருந்து ரூ.380இற்கு அதிகரிக்கப்பட்டன. முடக்கல் காலப்பகுதியின் போது நிவாரண வழிமுறையொன்றாக 2020 மார்ச் 23இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் முட்டையொன்றிற்கான விலையினை ரூ.10ஆகக் குறைத்தமையானது 2020 ஏப்பிறல் மற்றும் மே மாதங்களில் ஆண்டிற்கான மிகக் குறைந்த முட்டை விலைகளைத் தோற்றுவித்திருந்தது. எவ்வாறாயினும்,


4

வரைபடம் 4.2
வாராந்த சில்லறை விலைகள் - சம்பா





*மூலங்கள்* : நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.3
வாராந்த சில்லறை விலைகள் - தேங்காய் (நடுத்தரம்)





*மூலங்கள்* : நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.4
வாராந்த சில்லறை விலைகள் - இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம்




*மூலங்கள்* : நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.5
வாராந்த சில்லறை விலைகள் - சீனி




*மூலங்கள்* : நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை
இலங்கை மத்திய வங்கி

மே மாதத்திலிருந்து ஒகத்து வரையான காலப்பகுதியில் முட்டை விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் 2020 செத்தெம்பர் 07இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் முட்டையொன்றிற்கான விலையினை ரூ.2 இனால் குறைப்பதற்கான தீர்மானத்தினை அவசியப்படுத்தியிருந்தது. இதன் விளைவாக, செத்தெம்பரிலிருந்து நவம்பர் வரையான காலப்பகுதிகளில் முட்டையின் விலைகள் வீழ்ச்சியடைந்திருந்த போதிலும் 2020 திசெம்பரில் இது மீண்டும் அதிகரித்திருந்தது. கோழி இறைச்சியின் விலைகளை நியாயமான மட்டங்களில் பேணும் பொருட்டு அரசாங்கம் 2020 மார்ச் 12 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் ப்றொயிலர் கோழி இறைச்சி (தோலுடன்) மற்றும் கோழி இறைச்சி (தோல் நீக்கிய) என்பவற்றின் மீது உயர்ந்தபட்ச சில்லறை விலைகளை முறையே ரூ.430 மற்றும் ரூ.500இற்கு விதித்திருந்தது. அதற்கமைய, கோழி இறைச்சியின் விலைகள் 2020 ஏப்பிறலில் வீழ்ச்சியடைந்த போதிலும் அதன் பின்னர் 2020 மே மாதத்திலிருந்து செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் அதன் விலைகள் அதிகரித்தப் போக்கினை காண்பித்திருந்த அதேவேளை, அதன்பின்னர் சிறிய வீழ்ச்சியொன்றினை காண்பித்திருந்தது. பிரதானமாக கோழி இறைச்சியின் விலைகளில் ஏற்படும் அதிகரிப்பினை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறையொன்றாக 2020 மார்ச் 12 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் சோளத்தின் உயர்ந்தபட்ச சில்லறை விலையும் கிலோ கிராம் ஒன்றிற்கு ரூ.55இற்குக் குறைக்கப்பட்டது. உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் 2019 திசெம்பர் 06இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மஞ்சள் தூள் இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையின் காரணமாக கடந்த காலங்களில் சிறிய போக்கு மாற்றங்களைக் காண்பித்த மஞ்சள் தூளின் விலைகள் மே மாதம் தொடக்கம் ஒகத்து மாதத்திற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் 2020இல் தொடர்ச்சியாக அதிகரிக்கும் உத்வேகமொன்றினைக் காண்பித்திருந்தன. 2020 ஏப்பிறல் 21 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் கிலோ கிராம் ஒன்றிற்கான மஞ்சள் தூளிற்கு ரூ.750 உயர்ந்தபட்ச சில்லறை விலை விதிக்கப்பட்டிருந்த போதிலும், உள்நாட்டு நிரம்பல் மற்றும் கேள்வி என்பவற்றிற்கிடையிலான இடைவெளி கணிசமாக காணப்பட்டமையின் காரணமாக தொடர்ந்து வந்த மாதங்களில் அதன் விலைகள் உச்ச மட்டத்தை அடைந்திருந்ததுடன் 2020 செத்தெம்பர் 24 முதல் நடைமுறைக்கு வரும்வகையில் அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச சில்லறை விலைகளை அகற்றுவதற்கும் இட்டுச்சென்றிருந்தது. அதேவேளை, கோதுமை மாவின் விலைகள் 2020 காலப்பகுதியில் நிலையாக காணப்பட்ட அதேவேளை, சந்தையில் காணப்பட்ட உயர்ந்தளவான அரிசி விலைகளைப் பிரதிபலித்து அரிசி மாவின் விலைகள் மே மாதத்திலிருந்து அதிகரிக்கும் உத்வேகத்தை காட்டியிருந்தன. 2020இல் நிலவிய உயர்வான தேங்காய் விலைகளுக்கு இசைவாக தேங்காய் எண்ணெயின் விலைகளும் ஆண்டு காலப்பகுதியில் ஒட்டுமொத்தமாக அதிகரித்த போக்கினைத் தொடர்ந்திருந்த அதேவேளை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர்வாகக் காணப்பட்டன. ஆண்டின் முதலரைக் காலப்பகுதியில் அதிகரித்த சீனியின் விலைகள் அதன் பின்னர் சிறிதளவு வீழ்ச்சியடைந்தன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று மீண்டும் தோன்றியமையின் மூலம் உருவான இடர்பாடுகளைக் கருத்திற்கொண்டு பருப்பு, தகரத்திலடைத்த மீன், மற்றும் சீனி போன்ற இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை 2020 ஒத்தோபர் 14இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் கிலோ கிராம் ஒன்றிற்கு 25 சதத்திற்கு கீழ்நோக்கித் திருத்தம் செய்யப்பட்டது. இதன் விளைவாக, நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் இரண்டினதும் ஏனைய உணவுச் சுட்டெண்கள் 2020 காலப்பகுதியில் அதிகரித்த போக்கினை காண்பித்திருந்தன.

**முன்னைய ஆண்டுகளுக்கு முரணாக 2020இல் உணவல்லா வகைகளிலுள்ள பொருட்களின் விலைகளின் போக்கு, விசேடமாக ஆண்டின் முதலரைப் பகுதியில் மிதமான மட்டமொன்றில் காணப்பட்டதுடன் இது முடக்கல் நிலைமைகளின் மூலம் தோற்றம்பெற்ற அத்தியாவசியமற்ற பொருட்கள் மற்றும் பணிகளுக்கான குறைவடைந்த கேள்வி மற்றும் நிருவகிக்கப்பட்ட விலைகளில் திருத்தம் மேற்கொள்ளாமை என்பவற்றைச் சுட்டிக்காட்டியிருந்தது.** எனினும், 2020 சனவரியில் இரண்டாம் நிலைக் கல்விக்கான வகுப்புக் கட்டணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் சேர்த்து வீட்டு வாடகையில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பவற்றின் காரணமாக உணவல்லா வகைகளின் விலையானது 2019 சனவரிக்குப் பின்னரான உயர்ந்தளவான அதிகரிப்பை எடுத்துக்காட்டியிருந்தது. மருத்துவ ஆய்வு கூடங்களுக்கான கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக சுகாதாரத் துணைவகை மார்ச்சில் அதிகரித்து 2020 யூலை இறுதியில் இடம்பெற்ற முழுமையான இரத்த எண்ணிக்கை ஆய்வுகூடப் பரிசோதனையின் கீழ்நோக்கிய விலைத் திருத்தத்தின் மூலம் பங்களிப்புச் செய்யப்பட்டு செத்தெம்பரில் வீழ்ச்சியடைந்ததுடன் அதன்பின்னர் திசெம்பரில் சிறிய அதிகரிப்பொன்றினை பதிவுசெய்ததுடன் 2020இல் மாற்றமின்றிக் காணப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் எரிபொருள் விலைகளை நிலையான மட்டத்தில் பேணியிருந்தது. அதேவேளை, லங்கா ஐஓசி அதன் பெற்றோல் (92 ஒக்டேன்) விலையை 2020 ஏப்பிறல் 06 தொடக்கம் லீற்றர் ஒன்றிற்கு ரூ.142இலிருந்து ரூ.137ஆகக் குறைத்திருப்பினும் 2020 மே மாதம் 17ஆம் திகதி அதன் ஆரம்ப விலைக்கு மீண்டும் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், 2020 மே மாதம் 20ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அடுத்த விலைத் திருத்தத்தில் லங்கா ஐஓசி நிறுவனமானது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலைக்குப் பொருந்தும் விதத்தில் பெற்றோல் (92 ஒக்டேன்)


விலையினை ரூ.137ஆக மீண்டும் குறைத்திருந்தது. மேலும், ஆண்டு காலப்பகுதியில் புகையிரதக் கட்டணங்கள் மாற்றமின்றி காணப்பட்டபோதிலும் கொவிட்-19 போக்குவரத்துக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இடர்நேர்வு மட்டத்தினைப் பரிசீலனையிற் கொண்டு 2020 நவம்பர் 11 தொடக்கம் பேருந்துக் கட்டணங்கள் திருத்தம் செய்யப்பட்டன. அதற்கமைய, இருக்கை கொள்ளளவுக்கு மாத்திரம் பயணிகளை ஏற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த பயண மார்க்கங்களுக்கான பேருந்துக் கட்டணம் 1.2 மடங்குகளால் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் இருக்கைக் கொள்ளளவின் 50 சதவீதத்திற்கு மாத்திரம் பயணிகளை ஏற்றுவதற்காக அனுமதிக்கப்பட்ட பயண மார்க்கங்களுக்கான பேருந்துக் கட்டணங்கள் ஏற்கனவே காணப்பட்ட தொகையில் 1.5 மடங்குகளால் அதிகரிக்கப்பட்டன. எனினும், உலகளாவிய நோய்த்தொற்று நிலைமையின் மூலம் விதிக்கப்பட்ட பரந்த பாதுகாப்புக் கட்டுப்பாடுகளைப் பிரதிபலித்து விமானக் கட்டணங்கள் 2020 மார்ச் தொடக்கம் மாற்றமின்றிக் காணப்பட்டன. அதேபோன்று, சில காலாந்தர விலை அதிகரிப்புக்களை உள்ளடக்குகின்ற கல்விக் கட்டணங்களின் திருத்தம் ஆண்டு காலப்பகுதியில் அவதானிக்கப்படவில்லை. அதேவேளை, நோய்த்தொற்றுடன் தொடர்புடைய முடக்கல் நிலைமைகளால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் பொது மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதை முக்கிய நோக்காகக்கொண்டு நீர், மின்சாரம் மற்றும் திரவ வாயு போன்ற பயன்பாடுகள் மீதான விலைகளுக்கு எவ்விதமான திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், தபால், நிலையான தொலைபேசி, கையடக்க தொலைபேசி, இணையம் மற்றும் செய்மதி தொலைக்காட்சி போன்றவற்றின் தொடர்பூட்டல் கட்டணங்களும் 2020இல் திருத்தப்படவில்லை. மேலும், மதுபானம், பியர் மற்றும் சிகரட் போன்றவற்றின் விலைகள் 2020இல் மாற்றமின்றி காணப்பட்ட அதேவேளை பாக்குகளின் விலை யூலையிலிருந்து செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் அதிகரித்திருந்ததுடன் 2019உடன் ஒப்பிடுகையில் 2020இன் இரண்டாமரைப்பகுதியில் கணிசமானளவிற்கு உயர்வாக காணப்பட்டது. அதற்கமைய, இரு நுகர்வோர் விலைச் சுட்டெண்களினதும் உணவல்லா சுட்டெண்கள் 2020 காலப்பகுதியில் சிறிதளவான அதிகரிப்பை எடுத்துக்காட்டியிருந்தன.

## நுகர்வோர் விலைச் சுட்டெண்கள்

### தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்


**2020 சனவரியில் 137.0 சுட்டெண் புள்ளிகளை பதிவுசெய்த தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் ஏப்பிறலில் 134.8 சுட்டெண் புள்ளிகளுக்கு வீழ்ச்சியடைந்திருந்ததுடன் அதன்பின்னர் திசெம்பர் 2020இல் 141.2 சுட்டெண் புள்ளிகளுக்கு படிப்படியாக அதிகரித்திருந்தது.** கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுப் பரவலிற்கு முன்னர் 2020 சனவரியில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பானது உணவு மற்றும் உணவல்லா வகைகள் ஆகிய இரண்டிலுமுள்ள பொருட்களின் விலைகளின் அதிகரிப்பினால் தூண்டப்பட்டிருந்தது. அதன்பின்னர், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் பெப்புருவரியில் மாற்றமின்றிக் காணப்பட்டு உணவு வகைகளின் விலை வீழ்ச்சிகளினால் தூண்டப்பட்டு தொடர்ச்சியாக இரண்டு மாதங்களுக்கு வீழ்ச்சியடைந்திருந்தது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது, அதன் முன்னைய கீழ் நோக்கிய போக்கின் திரும்பலினை எடுத்துக்காட்டியதுடன் ஏப்பிறலிலிருந்து யூன் வரையான காலப்பகுதியில் அதிகரித்திருந்த அதேவேளை உணவு வகைகளிலுள்ள பொருட்களின் விலைகள் இவ்வுத்வேகத்திற்கு பிரத்தியேகமாக பங்களித்திருந்தன. உணவல்லா வகைகளிலுள்ள பொருட்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பின் மூலம் உணவு வகைகளிலுள்ள பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி பயனற்றுப்போகச் செய்யப்பட்டதனால் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் யூலையில் மீண்டும் மாற்றமடையாது காணப்பட்டது. அதன்பின்னர், தேசிய நுகர்வோர் விலைச்

வரைபடம் 4.6
தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் மாதத்திற்கு மாத சதவீத மாற்றத்திற்கான பங்களிப்பு - 2020




மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 4.7
கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் மாதத்திற்கு மாத சதவீத மாற்றத்திற்கான பங்களிப்பு - 2020




மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

4

சுட்டெண்ணானது 2020இன் எஞ்சிய காலப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. ஓகத்திலிருந்து நவம்பர் வரையான காலப்பகுதில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களுக்கு உணவு வகைகளிலிருந்தான உயர்வான பங்களிப்புடன் உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்களின் விலை அதிகரிப்புகள் பங்களித்திருந்தன. அதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் 2020 திசெம்பரில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பிற்கு உணவு வகைகளிலுள்ள பொருட்களின் விலைகளின் அதிகரிப்பு பிரத்தியேகமாகப் பங்களித்திருந்தது.

### கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது 2020 சனவரியின் 134.6 சுட்டெண் புள்ளிகளிலிருந்து திசெம்பரில் 138.0 சுட்டெண் புள்ளிகளுக்கு 2020 காலப்பகுதியில் அதிகரிக்கின்ற போக்கொன்றினை பின்தொடர்ந்திருந்த அதேவேளை, பெப்புருவரி மற்றும் ஓகத்து மாதங்களில் மாற்றமின்றிக் காணப்பட்டது.** 2020 சனவரி மாதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு உணவு மற்றும் உணவல்லா வகைகளிலுள்ள பொருட்களின் விலைகளின் அசைவுகள் துணையளித்திருந்தன. உணவல்லா வகையின் விலை மற்றும் உணவு வகைகளின் விலைகள் ஒன்றிற்கொன்று எதிரீடு செய்யப்பட்டமை காரணமாக கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் பெப்புருவரி மற்றும் ஓகத்து மாதங்களில் மாற்றமின்றிக் காணப்பட்டது. அதேவேளை, உணவு வகைகளிலுள்ள பொருட்களின் விலைகளின் அசைவானது 2020 மார்ச்சில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சி அதன் பின்னர் 2020 ஏப்பிறல் மற்றும் ஒத்தோபர் மாதங்களில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புகளுக்கு பிரத்தியேகமாகப் பங்களித்திருந்தது. ஆண்டின் எஞ்சிய மாதங்களில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மூலம் எடுத்துக்காட்டப்பட்ட மாதத்திற்கு மாத அதிகரிப்புகளுக்கு உணவு வகைகளிலிருந்தான உயர்வான பங்களிப்புடன் இணைந்து உணவு மற்றும் உணவல்லா வகைகள் ஆகிய இரண்டிலும் காணப்பட்ட பொருட்களின் விலை அதிகரிப்புக்களுக்கு காரணமாக அமைந்திருந்தன.


### உற்பத்தியாளர் விலைச்சுட்டெண்

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தால் தொகுக்கப்படுகின்ற பொருட்களின் உள்நாட்டு உற்பத்தியாளர்களால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற சராசரி விலைகளில் அளவிடப்பட்டவாறான கொள்வனவாளர் விலைச் சுட்டெண்ணானது (2013 4ஆம் காலாண்டு = 100) 2020 சனவரியின் 144.3 சுட்டெண் புள்ளிகளிலிருந்து திசெம்பரில் 149.2 சுட்டெண் புள்ளிகளுக்கு அதிகரித்து செல்லும் போக்கினை 2020 காலப்பகுதியில் காட்டியிருந்தது.** உற்பத்தியாளர் விலைச்சுட்டெண்ணானது பொருளாதாரத்தின் வேளாண்மை, தயாரிப்பு மற்றும் பயன்பாடுகள் (மின்சாரம் மற்றும் நீர் வழங்கல்) போன்றவற்றின் உற்பத்தியாளர் விலைகளை உள்ளடக்குகின்றது. சனவரியில் 169.8 சுட்டெண் புள்ளிகளை பதிவுசெய்த உற்பத்தியாளர் விலைச்சுட்டெண்ணின் வேளாண்மை துணைச்சுட்டெண்ணானது அடுத்த மூன்று மாதங்களில் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் அதன் பின்னர் படிப்படியாக அதிகரித்து 2020 யூன் மாதத்தில் 184.7 சுட்டெண் புள்ளிகளுக்கும் 2020 திசெம்பரில் 185.1 சுட்டெண் புள்ளிகளுக்கும் அதிகரித்திருந்தது. அதேவேளை, உற்பத்தியாளர் விலைச்சுட்டெண்ணின் தயாரிப்பு துணைச்சுட்டெண்ணானது சனவரியில் 133.7இனை அறிக்கையிட்டு 2020 திசெம்பரில் 139.9 சுட்டெண் புள்ளிகளை அடைந்திருந்ததுடன் அதற்கிடையிலான காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க தளம்பல்களை பதிவுசெய்திருந்தது. சனவரியில் 86.7 சுட்டெண் புள்ளிகளை பதிவுசெய்த உற்பத்தியாளர் விலைச்சுட்டெண்ணின் துணைச்சுட்டெண்ணான மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் என்பன மார்ச் மாதம் வரைக்கும் அதிகரித்திருந்ததுடன் ஏப்பிறல் தொடக்கம் மே மாதம் வரையான காலப்பகுதியில் குறைவடைந்து செல்லும் போக்கை தொடர்ந்திருந்ததுடன் அதன்பின்னர் 2020 திசெம்பரில் 92.3 சுட்டெண் புள்ளிகளுக்கு அதிகரித்திருந்தது.

## 4.3 கூலிகள்

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பாதகமான தாக்கத்திற்கு மத்தியில் முறைசார் மற்றும் முறைசாரா தனியார் துறைகளிலுள்ள ஊழியர்களின் உண்மைக் கூலிகள் வீழ்ச்சியினைக் காண்பித்திருந்த அதேவேளை அரச துறை ஊழியர்களினது உண்மைக் கூலிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020இல் அதிகரிப்பொன்றை காட்டியிருந்தன.** இருப்பினும், கூலிகளின் ஊடாக பொது விலை மட்டத்தின் மீது ஏற்படுத்தப்பட்ட கேள்வித்தூண்டல் அழுத்தமானது ஆண்டு காலப்பகுதியில் குறைவடைந்து காணப்பட்டது.

வரைபடம் 4.8
உண்மை கூலி வீத சுட்டெண்களின்
வருடாந்த சராசரி மாற்றம்




மூலங்கள் : தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## தனியார் துறைக் கூலிகள்

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுப் பரவலின் காரணமாக முறைசார் தனியார் துறை மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது.** அதற்கமைய, தொழில் நடவடிக்கைகளுக்கு ஏற்பட்ட இடையூறுகள் மூலம் அவற்றின் காசுப்பாய்ச்சல் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தமையினால் சில நிறுவனங்கள் சம்பளங்களை கீழ்நோக்கித் திருத்தம்செய்ய வேண்டியிருந்தது. மேலும், உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக வீட்டில் தங்குவதற்கு வேண்டப்பட்டிருந்த ஊழியர்களுக்கு இறுதியாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளத்தில் 50 சதவீதத்தினை அல்லது ரூ.14,500 இவற்றில் எது ஊழியருக்கு அதிகம் சாதகமானதோ அதனைக் வழங்குவது தொடர்பில் திறன் அபிவிருத்தி, தொழில் மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சு[3], இலங்கை ஊழியர்கள் சம்மேளனம் மற்றும் தொழிற் சங்கங்கள் என்பவற்றிற்கிடையில் முற்தரப்பு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. எனினும், சம்பளச் சபைகளினால் ஆளப்படுகின்ற ஊழியர்களின் குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண்ணின் (1978 திசெம்பர் = 100) ஆண்டுச் சராசரி மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முறைசார் தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் பெயரளவிலான கூலிகள் 2019உடன் ஒப்பிடுகையில் 2020இல் 0.2 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இவ்வதிகரிப்பானது கைத்தொழில் மற்றும் வணிகம் அத்துடன் பணிகள் துணை வகைகளிலுள்ள பணியாளர்களின் குறைந்தபட்ச கூலிகள் என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பின் மூலம் பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும், முறைசார் தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் உண்மைக் கூலிகள் 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் 4.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தன.

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுப் பரவலினைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட கட்டுப்பாட்டு வழிமுறைகளுக்கு மத்தியில் முறைசாரா தனியார் துறையினரின் உழைப்பிற்கான இயலளவின் மீது ஏற்பட்ட இடையூறுகளின் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது.** அதற்கமைய, முறைசாரா தனியார் துறை ஊழியர்களின் பெயரளவிலான கூலிகள், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் முதலாவது அலையுடன் மே மாதத்தில் குறைவடைந்திருந்ததுடன் 2020 செத்தெம்பர் வரை படிப்படியாக மீட்சியடைந்திருந்தது. அதன் பின்னர், உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாம் அலையுடன் அது 2020 ஒத்தோபரில் மீண்டும் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் 2020 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் மீட்சியடைந்திருந்தது. ஒட்டுமொத்தமாக, முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி மாற்றத்தினால் (2012=100) அளவிடப்பட்டவாறான முறைசாரா தனியார் துறை ஊழியர்களின் பெயரளவிலான கூலிகள் 2019உடன் ஒப்பிடுகையில் 2020இல் 3.3 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதேவேளை, முறைசாரா தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் உண்மைக் கூலிகள் 2019உடன் ஒப்பிடுகையில் 2020இல் 2.7 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## அரச துறைக் கூலிகள்

**அரச துறைக் கூலி வீதச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி மாற்றத்தினால் (2016=100) அளவிடப்படுகின்றவாறான அரச துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2019உடன் ஒப்பிடுகையில் 2020இல் 9.2 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.** இவ்வதிகரிப்பிற்கு 2019 யூலை 01இலிருந்து செயற்படும் வகையில் புதிய ஓய்வூதியத்திற்குட்படாத மாதாந்த இடைக்காலக் கொடுப்பனவான ரூ.2,500இனை அனைத்து அரச துறை ஊழியர்களுக்கும் அறிமுகப்படுத்தியிருந்தமை மற்றும் 2020 சனவரி 01ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் அடிப்படைச் சம்பளத்திற்கு விசேட கொடுப்பனவினதும் இடைக்காலக் கொடுப்பனவினதும் இறுதித் தொகுதியினைச் சேர்த்தமை என்பன காரணங்களாக அமைந்திருந்தன. அதற்கமைய, அரச துறை ஊழியர்களின் உண்மைக் கூலிகள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020இல் 2.9 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

3 2020 ஒகத்து 09 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அமைச்சின் பெயரானது தொழில் அமைச்சென மாற்றப்பட்டுள்ளது.

4